

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி தொகுதிக்குட்பட்ட நரிக்குடி ஒன்றியத்தைச் சேர்ந்த டி. கரிசல்குளம், பிள்ளையார்நத்தம், பனையூர், செல்லையாபுரம், செம்பொன்நெருஞ்சி, நெல்லிக்குளம், மீனாட்சிபுரம், ரெங்கையன்பட்டி, சேதுபுரம், சீலம்பட்டி, இலுப்பையூர் ஆகிய பகுதிகளில் முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ. மக்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தார். மக்களின் குறைகளையும் கோரிக்கைகளையும் கேட்டறிந்து விரைவாக நிறைவேற்றி தருவோம் என உறுதியளித்தார்.



திருவண்ணாமலை மாநகர நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில், முன்னாள் அமைச்சரும், கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் உரையாற்றினார். உடன் கழக மருத்துவஅணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், இரா. ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா விஜயரங்கன், ஏ.ஏ.ஆறுமுகம், சு.விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், சி.சண்முகம், பா.ஷெரீப், மு.கருணாமூர்த்தி உட்பட பலர் உள்ளனர்.

### வேலூர் மாவட்டத்தில் பெரும்பாலானோருக்கு வாழ்வாதாரமாக விளங்கும்

# தோல் தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில்- டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி !

புதுடெல்லி, ஜுலை 25-

வேலூர் மாவட்டம் தோல் தொழில், தொழிற்சாலை உபகரணங்கள், மற்றும் அதனுடன் சார்ந்த உற்பத்தி தொழில்களின் (MSME) முக்கிய மையமாக விளங்கி வருகிறது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரமாக இருக்கும் இந்தத் தொழில்கள் மேலும் வளர்ச்சி பெறவும், புதிய வேலைவாய்ப்புகள் உருவாகவும், தொழில்களுக்கு தேவையான நவீன உள்கட்டமைப்பு, தொழில்நுட்ப வசதிகள், சந்தை வாய்ப்புகள் மற்றும் ஒன்றிய அரசின் ஆதரவுத் திட்டங்கள் முழுமையாக கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், வேலூர் மக்களவை உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

வேலூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் MSME தொழில் குழுமங்களின் தற்போதைய நிலை, அவற்றின் வளர்ச்சி வாய்ப்புகள், தொழில்கள் எதிர்கொள்ளும் சவால்கள், உள்கட்டமைப்பு வசதிகளில் உள்ள குறைபாடுகள், தொழில்நுட்ப மேம்பாடு, வங்கிக் கடன் வசதி, திறன் மேம்பாட்டுப் பயிற்சி, சந்தை வாய்ப்புகள் மற்றும் மத்திய அரசு செயல்படுத்தியுள்ள திட்டங்களின் பயன்கள் குறித்து விரிவான விளக்கம் அளிக்கவும்?

இதற்கு பதிலளித்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை இணை அமைச்சர் திருமதி.ஷோபா கரந்த்லாஜே எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு :

குறு மற்றும் சிறு தொழில் குழும மேம்பாட்டுத் திட்டம் Micro and Small Enterprises - Cluster Development Programme (MSECDP) திட்டத்தின் கீழ், வேலூர் மாவட்டத்திற்கு தொழில் குழுமத்திற்கான ஒரு பொது வசதி மையம் (Common Facility Centre) அமைக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் 4 உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மாநில அரசுகளின் பரிந்துரைகளின் அடிப்படையில் தொழில்கள் எதிர்கொள்ளும் சவால்கள், உள்கட்டமைப்புத் தேவைகள், தொழில்நுட்ப மேம்பாடு, உற்பத்தித் திறன் உயர்வு, தர மேம்பாடு மற்றும் பொதுவசதிகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் ஆய்வு செய்யப்பட்ட பின்னரே மத்திய அரசின் ஒப்புதல் வழங்கப்படுவதாகவும் பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய உற்பத்தித்திறன் கவுன்சில் (NPC) மேற்கொண்ட மதிப்பீட்டின் அடிப்படையில், MSECDP திட்டம் தொழில்களின் உற்பத்தித் திறனை உயர்த்தவும், புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தவும், தரத்தை மேம்படுத்தவும், சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்தவும், வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளதாகவும் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

### உயிர்காக்கும் மருந்துகளுக்கான

# ஜி.எஸ்.டி.வரியை குறைக்கத் திட்டம் உள்ளதா?

## மாநிலங்களவையில் – இரா. கிரிராஜன் கேள்வி !



புதுடெல்லி, ஜுலை 25-

உயிர்காக்கும் மருந்துகளுக்கான ஜி.எஸ்.டி. வரியை குறைக்கும் திட்டம் உள்ளதா என நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசிடன் தி.மு.க. எம்.பி. கிரிராஜன் கேள்வி எழுப்பி உள்ளார்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் ஜுலை 20ஆம் தேதி தொடங்கி நடந்துவரும் நிலையில், அதில் கலந்து கொண்டுள்ள தி.மு.க. எம்.பி. இரா. கிரிராஜன், உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் உபகரணங்களுக்கான ஜி.எஸ்.டி. வரியை குறைப்பது குறித்து ஒன்றிய அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒன்றிய அரசின் நிதி அமைச்சரிடம், தமிழ்நாட்டில் உள்ள வர்த்தகர்கள், உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் சேவைத் துறையினரிடமிருந்து, தற்போதுள்ள ஜி.எஸ்.டி. வரியை குறைக்குமாறு அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா? குறிப்பிட்ட சேவைப் பொருட்களின் ஜி.எஸ்.டி. வரியை குறைக்கும் படி அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா? உயிர்காக்கும் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், ஆய்வக உபகரணங்கள், ஸ்டென்ட்கள் உள்ளிட்ட அறுவை சிகிச்சைக் கருவிகளுக்கான ஜி.எஸ்.டி. வரி விகிதங்களைக் குறைக்க அரசாங்கத்திற்கு ஏதேனும் திட்டங்கள் உள்ளவா போன்ற கேள்விகளை தி.மு.க. எம்.பி. கிரிராஜன் கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு பதிலளித்துள்ள ஒன்றிய அரசின் நிதித் துறை இணை அமைச்சர் பங்கஜ் சௌத்ரி, தமிழ்நாட்டில் உள்ள வர்த்தகர்கள், உற்பத்தி நிறுவனங்கள், சேவைத் துறையினரிடமிருந்து, உயிர்காக்கும் மருந்துகள், உபகரணங்கள் மற்றும் சேவைப் பொருட்களுக்கான ஜி.எஸ்.டி. விகிதங்களைக் குறைப்பது தொடர்பாக எந்தவொரு கோரிக்கையும் பெறப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஜி.எஸ்.டி. கவுன்சிலின் பரிந்துரைகளின் அடிப்படையில், கடந்த ஆண்டு செப்டம்பர் 3 ஆம் தேதி நடைபெற்ற 56வது கூட்டத்தில், சுகாதாரத் துறையில் ஜி.எஸ்.டி. விகிதங்களை விரிவாக முறைப்படுத்தும் நோக்கில், குறிப்பிடப்பட்ட 36 உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்களுக்கு 5 அல்லது 12 சதவீதமாக இருந்த ஜி.எஸ்.டி. வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு, பூஜ்ஜியமாகக குறைக்கப்பட்டுள்ளதாகவும், மற்ற அனைத்து மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்களுக்கும் 5 சதவீதம் என்ற ஜி.எஸ்.டி. வரி விகிதம் பொருந்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர் காக்கும் மருத்துவம் தவிர பொது மருத்துவம், அறுவை சிகிச்சை, பல் மருத்துவம், கால்நடை மருத்துவம் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் மருத்துவ சாதனங்கள், கருவிகள், உபகரணங்கள் மீதான ஜி.எஸ்.டி. கவுன்சில் முறைப்படுத்தியுள்ளதன் அடிப்படையில், விலக்கு அளிக்கப்படாத பொருட்களுக்கு 5 சதவீதம் மட்டுமே சலுகை அடிப்படையிலான ஜி.எஸ்.டி. வரி விதிக்கப்படுவ தாகவும், தி.மு.க. எம்.பி. கிரிராஜனின் கேள்விக்கு மத்திய அரசு பதிலளித்துள்ளது.

### கடன் உத்தரவாதத் திட்டம்

# குறு-சிறு தொழில் நிறுவனங்களுக்கு பிணையமில்லா கடன் பெற உதவியுள்ளதா?

## மக்களவையில் - சி.என். அண்ணாதுரை கேள்வி !



புதுடெல்லி, ஜுன் 25-

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) அமைச்சரிடம் பின்வருவன குறித்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என திருவண்ணாமலை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் எழுப்பிய கேள்வி வருமாறு:

கடன் உத்தரவாத நிதி அறக்கட்டளை (CGTMSE) மூலம் செயல்படுத்தப்படும் கடன் உத்தரவாதத் திட்டம் (CGS), குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு (MSEs) பிணையமில்லா (Collateralfree) கடன் பெறுவதற்கு உதவியுள்ளதா? அவ்வாறு இருந்தால் அதன் விவரங்கள் என்ன?

2022 முதல் இதுவரை, தமிழ்நாட்டில் இந்தத் திட்டத்தின் கீழ் கடன் உத்தரவாதம் பெற்றுள்ள குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு? மேலும், அனுமதிக்கப்பட்ட கடன் தொகை மாவட்ட வாரியாகவும்,துறை வாரியாகவும் எவ்வளவு?

முதல் தலைமுறை தொழில்முனைவோர், பெண்கள் தலைமையிலான தொழில் நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாட்டின் பின்தங்கிய மாவட்டங்களில் உள்ள தொழில் அலகுகள் இந்தத் திட்டத்தின் பலன்களை போதுமான அளவில் பெற முடிந்துள்ளனவா? அவ்வாறு இருந்தால், அது குறித்த அரசின் மதிப்பீடு என்ன?

தமிழ்நாட்டில் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு பிணையமில்லா கடன்களை வழங்குவதில் தாமதம், அதிக செயலாக்கக் கட்டணங்கள் அல்லது வங்கிகளின் தயக்கம் தொடர்பாக ஏதேனும் புகார்கள் அரசுக்கு வந்துள்ளனவா? அவ்வாறு இருந்தால், அவற்றின் விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்கலை மேம்படுத்தவும், CGTMSE திட்டம் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கவும் அரசு மேற்கொண்டுள்ள திருத்த மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

### கடல்சார் காற்றாலைத் திட்டம் மற்றும்

# எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

## மக்களவையில் — எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, ஜூலை 25 -

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள், நேற்று மக்களவையில், கோடைக்காலத்தில் அதிகரித்து வரும் மின்சாரத் தேவை, எல் நினோ உள்ளிட்ட வானிலை மாற்றங்களால் உருவாகும் சவால்கள், நிலக்கரி கிடைப்புத் தன்மை, மின்சார விநியோகப் பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஒருங்கிணைப்பு மற்றும் நாட்டின் நீண்டகால எரிசக்தி பாதுகாப்புத் திட்டங்கள் குறித்து நட்சத்திர அந்தஸ்து பெற்ற கேள்வி எழுப்பினார். அதற்கு, ஒன்றிய அரசின் மின்துறை மாண்புமிகு அமைச்சர் மனோகர் லால் அவர்கள் பதிலளித்தார்.

இதற்கு ஒன்றிய அரசின் மின்துறை அமைச்சர் மனோகர் லால் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

நாட்டில் போதுமான அளவில் மின்சாரம் கிடைப்பதாகவும், 2026 ஜூன் நிலவரப்படி நாட்டின் மொத்த நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறன் 548.86 ஜிகாவாட் ஆக உயர்ந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். 2014 ஏப்ரல் முதல் 324.7 ஜிகாவாட் புதிய மின் உற்பத்தித் திறன் சேர்க்கப்பட்டதன் மூலம் மின் பற்றாக்குறை நிலை நீக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். இதே காலத்தில் 2,18,267 சுற்று கிலோமீட்டர் மின் பரிமாற்றக் கோடுகள், 9,47,405 எம்.வி.ஏ. மின்மாற்றுத் திறன் மற்றும் 84,390 மெகாவாட் இடைமாநில மின் பரிமாற்றத் திறன் உருவாக்கப்பட்டுள்ளதால், மொத்த இடைமாநில மின் பரிமாற்றத் திறன் 1,20,340 மெகாவாட் ஆக உயர்ந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

எல் நினோ தாக்கத்தால் மின்சாரத் தேவை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதாகவும், 2026 ஏப்ரல் முதல் ஜூன் வரை உச்சபட்ச மின் தேவை கடந்த ஆண்டைவிட சுமார் 12 சதவீதம் உயர்ந்துள்ளதாகவும், 2026 மே மாதத்தில் 270.8 ஜிகாவாட் என்ற நாட்டின் வரலாற்றிலேயே அதிகபட்ச உச்ச மின் தேவை வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டதுடன், 2026 ஜூலை மாதத்தில் அகில இந்திய உச்ச மின் தேவை 270 ஜிகாவாட்டை இரண்டு முறை கடந்த போதிலும் அவையும் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார். மேலும், 2026 ஜூலை மாதத்தில் 103.7 ஜிகாவாட் (சூரிய மின்சாரம் - 75 ஜிகாவாட்; காற்றாலை - 28.7 ஜிகாவாட்) என்ற சாதனை அளவிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி பதிவாகியுள்ளதாகவும் கூறினார்.

**நிலக்கரி போதுமான இருப்பு உள்ளது!**

2026 ஜூலை 18 நிலவரப்படி அனல்மின் நிலையங்களில் 41.4 மில்லியன் டன் நிலக்கரி கையிருப்பு இருப்பதால், 85 சதவீத நிலைய சுமை காரணி அடிப்படையில் 13 நாட்களுக்கு போதுமான இருப்பு உள்ளதாகவும் கூறினார்.

தீன்தயாள் உபாத்யாய கிராம் ஜோதி யோஜனா, ஒருங்கிணைந்த மின் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பிரதம மந்திரி சஹஜ் பிஜ்லி ஹர் கர் யோஜனா (சௌபாக்யா) ஆகிய திட்டங்களின் கீழ் 1.85 லட்சம் கோடி மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், 18,374 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டதுடன், 2.86 கோடி குடும்பங்களுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். கிராமப்புறங் களில் சராசரி மின் விநியோக நேரம் 12.5 மணி நேரத்திலிருந்து 22.6 மணி நேரமாகவும், நகர்ப்புறங்களில் 22.1 மணி நேரத்திலிருந்து 23.4 மணி நேரமாகவும் உயர்ந்துள்ளதாகவும் கூறினார்.

தேசிய அளவில் மின் விநியோக நிறுவனங்களின் தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்பு 22.62 சதவீதத்திலிருந்து 15.04 சதவீதமாக குறைந்துள்ளதாகவும், ஒரு யூனிட் மின்சாரத்தின் சராசரி வழங்கல் செலவு மற்றும் வருவாய் இடைவெளி 0.78 இலிருந்து 0.06 ஆக குறைந்துள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், 2025 ஜூலை 29 அன்று நாட்டின் மொத்த மின்சாரத் தேவையில் 51.5 சதவீதம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் பூர்த்தி செய்யப்பட்டதுடன், 2025-26ஆம் ஆண்டில் 64,695 மெகாவாட் புதிய மின் உற்பத்தித் திறன், அதில் 50,905 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் சேர்க்கப்பட்டதாகவும் கூறினார்.

2026 ஜனவரி 14 அன்று உலகின் மிகப்பெரிய ஒத்திசைவு தேசிய மின் வலையமைப்பாக நாடு உருவெடுத்ததுடன், நாட்டின் மின் பரிமாற்ற வலையமைப்பு 5.08 லட்சம் சுற்று கிலோமீட்டர் பரிமாற்றக் கோடுகளையும், 1,469 ஜிகா வோல்ட் ஆம்பியர் மொத்த மின்மாற்றுத் திறனையும் எட்டியுள்ளதாகவும், 2025-26ஆம் ஆண்டில் மின்சாரப் பற்றாக்குறை பூஜ்ஜியமாக குறைந்துள்ள தாகவும், கோப்26 மாநாட்டில் அளித்த உறுதிப்பாட்டின்படி, 2030ஆம் ஆண்டிற்கான தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறனில் 50 சதவீதத்தை புதைபடிவ எரிபொருள் அல்லாத மூலங்களிலிருந்து பெறும் இலக்கை 2025ஆம் ஆண்டிலேயே, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக நாடு எட்டியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நீண்டகால எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்ய 2030ஆம் ஆண்டுக்குள் 500 ஜிகாவாட் புதைபடிவ எரிபொருள் அல்லாத மின் உற்பத்தித் திறன், 2035-36ஆம் ஆண்டில் 786 ஜிகாவாட் புதைபடிவ எரிபொருள் அல்லாத மின் உற்பத்தித் திறன் மற்றும் 315 ஜிகாவாட் நிலக்கரி மின் உற்பத்தித் திறன், 2047ஆம் ஆண்டுக்குள் 100 ஜிகாவாட் அணு மின் திறன், 100 ஜிகாவாட் நீரேற்று மின் சேமிப்புத் திட்டங்கள், 80 ஜிகாவாட் பேட்டரி மின் சேமிப்பு அமைப்புகள் மற்றும் 94 ஜிகாவாட் நீரேற்று மின் சேமிப்புத் திறன் ஆகிய இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், பசுமை ஆற்றல் வழித்தடத் திட்டம், கடல்சார் காற்றாலைத் திட்டம், உயர் திறன் சூரிய ஒளிமின்னழுத்த தொகுதிகளுக்கான உற்பத்தி ஊக்கத் திட்டம், மேம்பட்ட வேதியியல் மின்கல சேமிப்பு, மின்சார வாகன சார்ஜிங் கட்டமைப்பு, பேட்டரி மின் சேமிப்பு அமைப்புகளுக்கான நிதி இடைவெளி நிரப்பும் திட்டம், நீரேற்று மின் சேமிப்புத் திட்டங்கள் மற்றும் எரிசக்தி சேமிப்பு அமைப்புகளுக்கான புதிய வழிகாட்டுதல்கள் மூலம் நாட்டின் எரிசக்தி பாதுகாப்பையும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மாற்றத்தையும் வலுப்படுத்த ஒன்றிய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ஒன்றிய அரசின் மின்துறை அமைச்சர் மனோகர் லால் அவர்கள் பதிலளித்துள்ளார்.

# தமிழ்நாட்டில் புதிய நகரங்கள் 'ஸ்மார்ட் சிட்டிஸ்' திட்டத்தில் சேர்க்கப்படுமா?

## மக்களவையில் - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. கேள்வி!



புதுடெல்லி, ஜுலை 25-

தென் சென்னை மக்களவைத் தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், தமிழ்நாட்டில் புதிய நகரங்களை ஸ்மார்ட் சிட்டிஸ் திட்டத்தில் (Smart Cities Mission) சேர்ப்பது, திட்டத்தின் செயல்திறன், பயன்படுத்தப்படாத நிதி மற்றும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்களின் (ICCC) எதிர்கால செயல்பாடு குறித்து மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

அதாவது, தமிழ்நாட்டில் புதிய நகரங்களை ஸ்மார்ட் சிட்டிஸ் திட்டத்தில் சேர்க்க ஒன்றிய அரசுக்கு ஏதேனும் திட்டம் உள்ளதா? இல்லையெனில் அதற்கான காரணம் என்ன?

ஸ்மார்ட் சிட்டிஸ் திட்டத்தின் செயல்படுத்தும் திறன் மற்றும் பயன்படுத்தப்படாத நிதி தொடர்பாக மாநிலம் மற்றும் நகர வாரியாக அரசு மதிப்பீட்டு அறிக்கை தயாரித்துள்ளதா?

மேலும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஸ்மார்ட் நகரங்களிலும் ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தங்கள், நீண்டகால பராமரிப்பு, நிலையான செயல்பாட்டு நிதி மற்றும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்களை (ICCC) உள்ளாட்சி நிர்வாகத்துடன் ஒருங்கிணைப்பதற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சர் மனோகர் லால் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அந்த பதிலில்:

2025 மார்ச் 31ஆம் தேதியுடன் ஸ்மார்ட் சிட்டிஸ் மிஷன் நிறைவடைந்துள்ளதால், அதன் கீழ் புதிய நகரங்களை சேர்க்கும் எந்த ஏற்பாடும் தற்போது இல்லை.

2026 மார்ச் 31 நில வரப்படி, ரூ.48,000 கோடி மொத்த மத்திய நிதி ஒதுக்கீட்டில், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் ரூ.47,458 கோடி (99%) கோரியுள்ளன. இதில் ரூ.46,377 கோடி (98%) பயன்படுத்தப்பட்டுள்ளது. மாநிலம் மற்றும் நகர வாரியாக நிதி கோரிக்கை மற்றும் பயன்படுத்தப்பட்ட விவரங்கள் இணைப்பில் வழங்கப்பட்டுள்ளன.

நீதி ஆயோக் 2025 செப்டம்பரில் வெளியிட்ட மதிப்பீட்டு அறிக்கையின் படி, ஸ்மார்ட் சிட்டிஸ் மிஷன் தேசிய நகர்ப்புற வளர்ச்சி இலக்குகளுடனும், ஐக்கிய நாடுகள் சபையின் நிலைத்த வளர்ச்சி இலக்குகளுடனும் (SDGs) நன்கு ஒத்துப்போகிறது. மொத்தம் 8,063 திட்டங்களில் 93 சதவீத திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்கள் (ICCC) 100 சதவீதம் அமைக்கப்பட்டுள்ளதால், நகரங்களின் வாழ்வாதாரத் தரம், போக்குவரத்து, பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஸ்மார்ட் சிட்டிஸ் திட்டம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, 2025 ஜுன் 10ஆம் தேதி மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு ஆலோசனை அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி, சிறப்பு நோக்க நிறுவனங்கள் (SPVs) 2026 மார்ச் மாதத்திற்குள் மத்திய அரசு வழங்கிய நிதிக்கான பயன்பாட்டு சான்றிதழ்களை (UC) சமர்ப்பிக்க வேண்டும். மேலும், நடைபெற்று வரும் அனைத்து திட்டங்களையும் விரைந்து முடித்து, உருவாக்கப்பட்ட சொத்துகளுக்கான செயல்பாடு மற்றும் பராமரிப்பு திட்டங்களைத் தயாரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல், ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்கள் (ICCC) நகரங்களின் செயல்பாட்டு மையங்களாகவும், மாநில அளவிலான பகுப்பாய்வு மையங்களாகவும் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்றும், அவற்றின் நிர்வாகக் கட்டுப்பாடு நகர்ப்புற வளர்ச்சித் துறைகளிடம் இருக்க வேண்டும் என்றும் ஆலோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், நகர்ப்புற வளர்ச்சியின் எதிர்கால தேவைகளுக்கு ஏற்ப SPVகளின் பங்கை மறுவடிவமைக்க மாநிலங்கள் நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இணைப்பில் வழங்கப்பட்டுள்ள விவரங்களின் படி, தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, சேலம், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் வேலூர் ஆகிய 11 ஸ்மார்ட் நகரங்களுக்கு தலா ரூ.490 கோடி வரை மத்திய நிதி வழங்கப்பட்டுள்ளதுடன், பெரும்பாலான நகரங்கள் அந்த நிதியை முழுமையாக அல்லது கிட்டத்தட்ட முழுமையாக பயன்படுத்தியுள்ளன.

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.